செ.வெ.எண் : 892

22–10–2008

# செய்திக்குறிப்பு
# தமிழகச் சுற்றுலா கையேடு

தமிழகம் குளிர்ந்த மலைச் சாரல்களையும், படர்ந்து விரிந்த கடற்கரைகளையும், மரகதச் சோலைகளையும், மலைக்க வைக்கும் கோபுரங்களையும், பல்வேறு விதமான வன உயிரினங்களையும், புகழ்வாய்ந்த வரலாற்றுச் சின்னங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இத்தகைய சுற்றுலா வளங்களை பெற்றிருக்கிருக்கும் தமிழகத்தில் உள்ள 31 மாவட்டங்களைப் பற்றிய தகவல் தொகுப்பு களஞ்சியமாக இந்த தமிழகச் சுற்றுலா எனும் சுற்றுலா கையேடு வெளியிடப்படுகிறது. **முற்றிலும் தமிழில் வருகிற முதல் கையேடு இது என்பது குறிப்பித்தக்கது.** தமிழகத்தில் உள்ள சுற்றுலாத் தொடர்புடைய பல்வேறு அமைப்புகளுக்கும் மாணவ , மாணவியர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் தமிழகத்தின் சுற்றுலா வளங்களை தெரிந்துகொள்கின்ற வகையில் இனிய தமிழில் இப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்புப்பெற்றிருக்கும் இந்த தமிழ் சுற்றுலா கையேடு இன்று மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு என். சுரேஷ்ராஜன் அவர்களின் தலைமையில் 22.10.2008 அன்று காலை 10.00 மணி அளவில் சுற்றுலாத்துறையின் சார்பில் புத்தக வெளியீட்டு நிகழ்வு தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது. முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப. , அரசு செயலர் , சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, திரு சன்வத்ராம்,இ.ஆ.ப. (ஓய்வு), தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர், முனைவர் எம். இராஜாராம், இ.ஆ.ப., சுற்றுலாத்துறை மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் துறையின் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.